# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
## பொலிஸ் ஊடகப் பிரிவு
## POLICE MEDIA DIVISION
14 වන මහල,සුහුරුපාය,බත්තරමුල්ල

දිනය Date 04.11.2026 0655 நேரம் | දුරකථන අංකය Tel.NO 011-2887973 | මගේ අංකය My NO D/Media/out/1815 /26 | විද්‍යුත් ලිපිනය E-Mails dir.media@police.gov.lk


**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்**
**செய்திப் பணிப்பாளர் / செய்தி முகாமையாளர்**
**அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும்.**

**பொலிஸ் ஊடகப் பிரிவிற்கு அறிக்கையிடப்பட்ட முக்கிய தகவல்களை வெகுஜன ஊடகங்களுக்கு அனுப்புதல்.**

**01. சாலியவெவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற மனிதக் கொலை.**

2026.11.03 ஆம் திகதி மாலை> சாலியவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கும்புக்கல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றின் உள்ளே பெண்ணொருவர் உயிரிழந்த நிலையில் காணப்படுவதாக சாலியவெவ பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**இறந்த பெண் 32 வயதுடைய> கும்புக்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.**

குடும்பத் தகராறு முற்றியதன் காரணமாகக் கணவரால் இக்கொலை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். கணவர் தற்போது அப்பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சடலம் தொடர்பான நீதவான் விசாரணையின் பின்னர்> பிரேதப் பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரைக் கைது செய்வதற்காக சாலியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**02. சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த பெண் மற்றும் ஆண் ஆகியோரின் சடலங்கள் கண்டுபிடிப்பு – நுவரெலியா பொலிஸ் பிரிவு.**

2026.11.03 ஆம் திகதி காலை> நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திமுதுகம பிரதேசத்திலுள்ள வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான இரண்டு சடலங்கள் காணப்படுவதாக நுவரெலியா பொலிஸ்

நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**இறந்த பெண் 49 வயதுடைய> தெஹிஓவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இறந்த ஆண் 55 வயதுடைய> கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.**

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது> குறித்த பெண்ணும் ஆணும் நுவரெலியா பிரதேசத்திலுள்ள வாடகை வீட்டில் தங்கியிருந்த வேளையில்> அறையிலிருந்த அடுப்பிலிருந்து வெளியான புகையைச் சுவாசித்ததன் காரணமாக இம்மரணங்கள் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 03. பிரமிட் முறை நிதி நிறுவனமொன்றை நடத்தி பண மோசடியில் ஈடுபட்ட இரண்டு சந்தேகநபர்கள் கைது – நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு.

பிரமிட் முறை நிதி நிறுவனமொன்றை நடத்துதல்> ஊக்குவித்தல்> விளம்பரப்படுத்துதல்> நிதியளித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக நிதிக் குற்ற விசாரணைப் பிரிவிற்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அதன்படி> 2026.11.03 ஆம் திகதி நீர்கொழும்பு பிரதேசத்தில் வைத்து> இந்தப் பண மோசடியுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களையும் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

**சந்தேகநபர்கள் 45 மற்றும் 59 வயதுடையவர்கள் என்பதுடன்> திம்பிரிகஸ்கட்டுவ மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.**

நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 04. கோடா திரவத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது – வலான மத்திய ஊழல் ஒழிப்பு அதிரடிப் பிரிவு.

2026.11.03 ஆம் திகதி மாலை> பிங்வத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சின்னவத்த கால்வாய்க் கரைப் பிரதேசத்தில்> கிடைத்த தகவலின் அடிப்படையில் வலான மத்திய ஊழல் ஒழிப்பு அதிரடிப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டனர். இதன்போது> சட்டவிரோத மதுபானம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் 1>890 லீற்றர் கோடா திரவம் (10 பீப்பாய்கள்) உடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு பிங்வத்த பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

**சந்தேகநபர் 36 வயதுடைய> வெலேகெதர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.**

பிங்வத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**05. அனுமதிப்பத்திரமின்றி இரத்தினக்கற்கள் அகழ்ந்துகொண்டிருந்த ஐந்து சந்தேகநபர்கள் கைது – மஸ்கெலியா பொலிஸ் நிலையம்.**

2026.11.03 ஆம் திகதி மாலை> மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரவுன்ஸ்விக் பிரதேசத்தில்> கிடைத்த தகவலின் அடிப்படையில் மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினர் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டனர். இதன்போது> அனுமதிப்பத்திரமின்றி இரத்தினக்கற்கள் அகழ்ந்துகொண்டிருந்த ஐந்து சந்தேகநபர்கள்> இரத்தினக்கற்கள் அகழ்வதற்குப் பயன்படுத்திய உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**சந்தேகநபர்கள் 28 முதல் 39 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்பதுடன்> மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.**

மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**06. லொறி வாகனம் மோதியதில் பெண் பாதசாரி உயிரிழப்பு – அவிசாவளை பொலிஸ் பிரிவு.**

2026.11.03 ஆம் திகதி அதிகாலை> அவிசாவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொழும்பு – இரத்தினபுரி வீதியில்> அவிசாவளை வைத்தியசாலைக்கு முன்னால் அமைந்துள்ள பாதசாரிக் கடவையில்> இரத்தினபுரி திசை நோக்கிப் பயணித்த லொறி வாகனம் வீதியைக் கடந்து சென்ற பெண் பாதசாரி ஒருவருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த பெண் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

**இறந்த பெண் 65 வயதுடைய> பெரண்ணாவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.**

விபத்துடன் தொடர்புடைய லொறி வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன்> அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**07. கார் வாகனம் மோதியதில் ஆண் பாதசாரி உயிரிழப்பு – மத்தேகொட பொலிஸ் பிரிவு.**

2026.11.03 ஆம் திகதி நண்பகல்> மத்தேகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குடாமாதுவ – கோங்கஸ்ஹந்திய வீதியின் குடாமாதுவ பிரதேசத்தில்> கோங்கஸ்ஹந்திய திசையிலிருந்து குடாமாதுவ திசை நோக்கிப் பயணித்த கார் வாகனத்தை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் போனதையடுத்து> வீதியோரமாகச் சென்ற ஆண் பாதசாரி மீது மோதியுள்ளது. பின்னர் கார் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மற்றும் மின்கம்பத்துடனும் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த பாதசாரியும் முச்சக்கரவண்டியின் சாரதியும் ஹோமாகம வைத்தியசாலையில்

அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில்> பாதசாரி உயிரிழந்துள்ளார்.

**இறந்த ஆண் 68 வயதுடைய> மத்தேகொட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.**

விபத்துடன் தொடர்புடைய கார் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன்> மத்தேகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**08. முச்சக்கரவண்டி மோதியதில் ஆண் பாதசாரி உயிரிழப்பு – குருந்துவத்தை பொலிஸ் பிரிவு.**

2026.11.03 ஆம் திகதி காலை. குருந்துவத்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தர்ஸ்டன் வீதி – பாகத்தலே வீதியின் பாகத்தலே சந்திப் பிரதேசத்தில்> துன்முல்ல சந்தி திசையிலிருந்து ஜே.ஓ.சி. சந்தி திசை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் போனதையடுத்து> வீதியோரத்தில் நின்றுகொண்டிருந்த ஆண் பாதசாரி மீது மோதியுள்ளது. இதனால் முச்சக்கரவண்டி கவிழ்ந்து விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த பாதசாரியும் முச்சக்கரவண்டியின் சாரதியும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில்> பாதசாரி உயிரிழந்துள்ளார்.

**இறந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.**

குருந்துவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**09. கெப் வாகனம் மோதியதில் பெண் பாதசாரி உயிரிழப்பு – களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவு.**

2026.11.03 ஆம் திகதி மாலை> களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகொட – கட்டுகுருந்தை வீதியில்> விஜித மாவத்தை அருகில்> நாகொட சந்தி திசையிலிருந்து கட்டுகுருந்தை திசை நோக்கிப் பயணித்த கெப் வாகனம் வீதியைக் கடந்து சென்ற இரண்டு பெண் பாதசாரிகளுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த இரண்டு பெண் பாதசாரிகளும் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில்> அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

**இறந்த பெண் 66 வயதுடைய> பெல்மடுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.**

கெப் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன்> களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு.**